Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 ஈரோடு, 14-7-1945 ஆனி-மீ 31உ இதழ் 40

## கடவுள் சக்தி

(பெரியார் ஈ. வெ. ரா.)

நமது கடவுள்கள் சக்தி மிகவும் அதிசயமானதாகும்.

அதாவது நமது கடவுள்கள் உலகில் மக்களை அக்கிரமங்கள் செய்யவொட்டாமல் தடுக்கமுடியாதாம்.

0 0

ஆனால், மக்கள் சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் யாருக்கும் தெரியாமல் செய்த குற்றங்களையும் மனதினால் நினைத்த அக்கிரமங்களையும் பார்த்தும் ஒன்றுகூட விடாமல் பதியவைத்தும், அதற்குத் தகுந்தபடி தீர்ப்புக்கூறி, தண்டனை கண்டனை கொடுக்கவும், அதற்காக நரகத்தில் ஆழ்த்திவைக்கவும், மற்றும் பல ஜன்மங்கள் கொடுத்து, அவைகளில் கஷ்டப்படுத்தி வைக்கவும் முடியுமாம்.

0 0

நமது கடவுள்கள் சக்தி எவ்வளவு அதிசயமானது!

0 0

அதிலும் மகமதியர்களுடைய கடவுளும், கிறிஸ்தவர்களுடைய கடவுளும் மனிதன் செத்தபிறகு, எல்லாருடைய குற்றங்குறைகளையும் ஒன்றாய் பதியவைத்திருந்து, ஏதோ அதற்கு இஷ்டப்பட்ட நாளில் அதாவது, ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா மக்களையும் அவர்கள் புதைக்கப்பட்ட புதை குழியிலிருந்து எழுப்பிக் கணக்குப் பார்த்து ஒரே அடியாய் தீர்ப்புச் சொல்லி விடுமாம்.

0 0

இந்துக்களுடைய கடவுள்கள் அதாவது, சைவர்கள் கடவுள்களும், வைணவர்களுடைய கடவுள்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியாகவே அவ்வப்போது அவனைச் சுட்டு எரித்த பின் கண்களுக்குத் தெரியாத அவனுடைய ஆத்மாவைப் பிடித்து வைத்து, அதற்கு ஒரு சூட்சம சரீரமும் கொடுத்து அந்த சரீரத்திற்கு அதற்குத்தக்க தண்டனை கொடுக்குமாம். அது பெரிதும் அடுத்த ஜென்மத்தில் இன்னின்ன ஜந்துவாய் பிறந்து, இன்னின்ன பலன் அனுபவிக்க வேண்டும் என்று கட்டளையிடுமாம்.

0 0

கிறிஸ்துவ சமயத்தில் உள்ள கடவுள் சக்திப்படி எல்லா மனிதனும் பாவம் செய்தேதான் தீருவானாம்.

0 0

அந்தப் பாவம் ஏசுகிறிஸ்து மூலந்தான் மன்னிக்கப்படுமாம்.

0 0

மகம்மதிய மார்க்கப்படி மகம்மது நபிகள் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம்.

0 0

சைவ சமயப்படி சிவன் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம். அவருக்குத்தான் பாத்தியம் உண்டாம்.

0 0

வைணவ சமயப்படி விஷ்ணு மூலமாகத்தான் முடியுமாம். விஷ்ணுவுக்குத்தான் பாத்தியம் உண்டாம்.

0 0

ஆனால் சைவ வைணவ சமயங்கள்படி மக்கள் பாவமே செய்வது மாத்திரமல்லாமல் புண்ணியமும் செய்யக்கூடுமாம்.

அதற்காக சொர்க்கம், வைகுண்டம், கைலாசம் என்கின்ற பதவிகள் உண்டாம்.

0 0

அப்புறம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஜன்மங்களும் உண்டாம்.

0 0

இந்த அபிப்பிராயங்கள் எவ்வளவு குழப்பமானதாய் இருந்தாலும் பார்ப்பானுக்கு அழுதால் மேற்கண்ட மோக்ஷங்களோ அல்லது நல்ல ஜன்மமோ எது வேண்டுமோ அது கிடைத்துவிடுமாம்.

0 0

ஆகவே பொதுவாகக் கடவுள்களுடைய சக்திகள் அளவிட முடியாது என்பதோடு, அறிந்து கொள்ள முடியாது என்பதுமாத்திரமல்லாமல் அதைப் பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதோ சிந்திக்க முயற்சிப்பதோ மகாமகா பெரிய பெரிய பாவமாம்.

0 0

அதனால், எந்தப் பாவத்தைச் செய்தாலும், எவ்வளவு பாவத்தைச் செய்தாலும், அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமும் மன்னிப்பும் உண்டாம்.

0 0

ஆனால் கடவுளைப் பற்றியோ, அவரது சக்தியைப் பற்றியோ எதாவது எவனாவது சந்தேகப்பட்டு விட்டானோ பிடித்தது மீளாத சனியன்.

0 0

அவனுக்கு மன்னிப்பே கிடையாது. கிறிஸ்துநாதரைப் பிடித்தாலும் சரி, மகம்மது நபி பெருமானைப் பிடித்தாலும் சரி அல்லது சிவன் விஷ்ணு, மகேசன் ஆகிய எவரைப் பிடித்தாலும் சரி, ஒரு நாளும் அந்தக் குற்றம் (எந்தக் குற்றம்? கடவுளை சந்தேகிக்கப்பட்ட குற்றம்) மன்னிக்கப் படவேமாட்டாது.

0 0

ஆனால், இந்த எல்லாக் கடவுள்

ளுக்கும் அவர்களால் அனுப்பப் பட்ட பெரியார்களுக்கும் அவர்களுடைய அவதாரங்களுக்கு கடவுளைப் பற்றியும், அவர்களுடைய சக்தியின் பெருமைகளைப் பற்றியும் மக்களை சந்தேகப்படாமல் இருக்கும்படிக்கோ, அல்லது அவநம்பிக்கைப்படாமல் இருக்கும் படிக்கோ செய்விக்கமுடியாதாம்.

o o

ஏனென்றால், அவ்வளவு நல்ல சாதுவான சாந்தமான கருணையுள்ள சர்வ சக்தி பொருந்திய சர்வ வியாபகமுள்ள கடவுள்களாம்.

o o

பாவம் நாம் ஏன் அவற்றை தொந்திரவு செய்யவேண்டும்.

o o

எல்லாம் கடவுள் செயல் என்று சும்மா இருந்துவிடுவோம்.

## நாகர்கோவிலில் போர்வாள்

நாகர்கோவிலில் 22-6-45-ல் லக்ஷ்மிகாந்தம் என்ற நாடகமும், போர்வாள் என்ற புரட்சிகரமான நாடகமும், திராவிடப் புதுமலர்ச்சி நாடக சபா அமைப்பாளர் தோழர் எம். ஆர். ராதா அவர்களால் நடத்தப்பட்டன. அதுபோது தோழர் பி. ஜீவானந்தம் அவர்கள் சீர்திருத்த நாடகம் என்பது பற்றிப் பேசினார். தோழர் ராதா அவர்கட்கு, ஆசிரியர் கே. மதியழகன் அவர்களால் வாழ்த்துரை வாசித்து வழங்கப்பட்டது.

## கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை

இவ்வூர் ஷை வாசிப்புச்சாலையின் பயிற்சிக் கழக ஆதரவில் 30-6-45 இரவு 10-30-க்கு சங்கக் கட்டிடத்தில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் கே. மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். ராமசப்பு, கே. மனோகரன், ஆர். சித்தரஞ்சன், ஆர். மாடசாமி, என். ராமையா, எஸ். பாலசுந்தரம், சாதி மற்றும் பலர் சங்ககால மகளிர் என்பது பற்றி பேச கூட்டம் தலைவர் முடிவுரையோடும், நன்றி கூறலோடும் இனிது முடிவுற்றது.

## திருச்செங்கோடு திராவிடர் கழகம்

### ஆண்டு அறிக்கை

7-5-45ந் தேதி நமது திராவிடர் கழகம் அமைக்கப்பெற்றது. அதுபோது கழக நிர்வாகக்குழு தோழர் ஏ. வ. எஸ். அண்ணாமலை முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. ஷை கூட்டத்தில் இவ்வாண்டிற்கு தோழர் ஆர். கே. ஆறுமுகம் அவர்கள் தலைவராகவும் மற்றும் பதினொரு பேர்களைக் கொண்ட நிர்வாக குழுவும் அமைக்கப் பெற்றது.

இவ்வாண்டுகழக நிர்வாக வரவுசெலவு

கழக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| சந்தா வரவு | 262—5—0 |
| நன்கொடை வரவு | 217—7—6 |
| ஆக வரவு ரூ. | 479—12—6 |

செலவு

| | |
|---|---|
| கழக கட்டிட வாடகைக்கு | 50—0—0 |
| ரசீது புத்தகத்திற்கு | 14—3—0 |
| தந்தி தபால் | 4—9—9 |
| தண்ணீர் பந்தலுக்கு | 33—6—0 |
| பிரயாண வகையில் | 2—13—6 |
| விளக்குகளுக்கு | 18—15—6 |
| கொடித் துணி | 9—3—0 |
| செய்தித்தாள் கழகத்திற்கு வரவழைத்த வகையில் | 21—14—0 |
| பொதுக் கூட்டத்திற்கு | 39—5—6 |
| பையன் சம்பளம் | 38—0—0 |
| தோழர் சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு அளித்த உண்ணல் விருந்து | 113—12—9 |
| ஆக செலவு | 346—3—0 |
| செலவு நீக்கி இருப்பு | 133—9—6 |

கழகத்திற்காக இலவசமாக "திராவிட நாடு" தோழர் எஸ். கே. வரதராஜுலு வாலும், குடிஅரசு, தோழர் மா. இளம்பவேனாலும், பிப்புள்ஸ்வார் தோழர் மு. உயிர்மணியாலும், சுதந்திரன், கல்கி, கலைமகள், சக்தி, லிபரேட்டர் தோழர் ஆர். வி. பொன்னுசாமியாலும் வழங்கியதற்காக கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

தவிர புத்தகங்கள், மேஜை, நாற்காலி முதலியவைகள் இலவசமாகக் கழகத்திற்கு கொடுத்துதவிய தோழர்களான ஆர். கே. ஆறுமுகம், ஆர். வி. பொன்னுசாமி ஆகியவர்களுக்கும் எங்களுடன் ஒத்துழைத்த ஏனைய தோழர்களுக்கும் கழகத்தின் சார்பாக, எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவ்வறிக்கை 7-5-44 முதல் 2-6-45-ந் தேதி முடிய கழக நிர்வாகச் செயல்களை கழக ஆண்டு விழாவிற்குத்

## தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் குறைகள்

திருச்சி, தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் சங்கக் கூட்டம் 1-7-45-ந் தேதி தோழர் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் 22-10-44-ல் தஞ்சையில் கூடிய கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் மாநாட்டிற்கும், தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்களுக்கும் சம்பந்தமில்லையென்றும், தாங்கள் கிறிஸ்துவ மார்க்கத்திலிருந்தாலும், தாங்கள் ஆதிதிராவிட இந்துக்களைவிட சமூகப் பொருளாதாரம், கல்வி இவைகளில் கீழ் நிலையில் இருப்பதால் மே. த. வைசிராய் நிர்வாக சபையில் தங்களுக்கும் ஒரு ஸ்தானம் கொடுக்குமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதாகவும், எல்லா கல்வி நிலையங்களிலும் தங்கள் பிள்ளைகளுக்கு யாதொரு நிபந்தனையுமின்றி உபகாரச் சம்பளம் அளிக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும், இம்மாதக் கடைசி வாரத்தில் ஷை சமூக மாநாடு கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இராசை திராவிடர் கழகம்

### வைஸ்ராய்க்குத் தந்தி

"எங்கள் திராவிடநாட்டுத் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலக்காமல் வைஸ்ராய் துரை சிம்லாவில் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டின் திராவிட மக்களை எவ்விதத்தும் கட்டுப்படுத்தாது என்னும் விஷயத்தை எங்கள் திராவிட கழக சார்பில் மே. த. வைஸ்ராய்க்கு இத்தந்திமூலம் தெரிவிக்கிறோம்" என்று இராசை திராவிடர் கழகத்தார் மே. த. வைசிராய்க்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

## கவி பாரதிதாசன் நிதி

புரட்சிக் கவிஞருக்கெனத் திரட்டப்படும் நிதிக்குத் தாங்கள், நன்கொடை அனுப்பிவிட்டீர்களா?

இன்றே அனுப்புக! தமிழரின் தன்மானக் காவலனுக்குத் தக்கது செய்யத் தவறாதீர்!

என். கிருஷ்ணராஜ் ரெட்டியார்,
நாமக்கல், P. O., சேலம்

தலைமை தாங்கிய புரட்சிக் கவிஞர் தோழர் பாரதிதாசன் அவர்கள் முன்னிலையில், பணிவோடு தெரிவிக்கப் பெற்றது.

என். கே. பி. வேல், உயிர்மணி,
திருச்செங்கோடு.

# ஈரோடு
# திராவிட மாணவர் கழகம்

## பெரியார் ஈ. வெ. ரா. பேச்சு

☆

ஈரோடு திராவிட மாணவர் கழகத்தின் சார்பாக 9-7-45 மாலை மேனிக்கு ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சாவடி ஹாலில், பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் பெருமாள் முதலியார் எம். ஏ. எல். டி. அவர்களது தலைமையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்திற்கு சுமார் 300 மாணவர்கள் போல் வந்திருந்தனர்.

நிகழ்ச்சி துவக்கத்தில் தமிழ் வாழ்த்துப் பாடியதும் தோழர்கள் கோப்பு, அபீபு, சுப்பையன் ஆகியவர்கள் திராவிடர்கள் பற்றியும், அவர்களது நிலையைப் பற்றியும் திராவிட நாட்டுச் சமுதாய இயல் அரசியல் கட்சிகள் பற்றியும் பேசியபின் பெரியார் ஈ. வெ. ரா. 1-30 மணிநேரம் பேசினார்.

அதன் சுருக்கமாவது:

தலைவர் அவர்களே,

மாணவர்களே!

இவ்வூர் திராவிட கழகத்தின் சார்பாக நான் பேசவேண்டுமென்று சில மாணவர்களால் விரும்பப்பட்டேன்; அதுபற்றி மகிழ்ச்சியோடு பேச ஒருப்பட்டேன், எனினும் என்னபேசுவது என்பது பற்றி நான் இதுவரைகூட சிந்திக்கவில்லை. மாணவர்களாகிய உங்களைப் பார்த்தால் நீங்கள் பெரிதும் 15 வயது முதல் 18-வயது உடையவர்களாகவே காணப்படுகிறீர்கள்; உங்களுக்குப் பயன்படத்தக்கதும் பொருத்தமானதுமாக பேசவேண்டுமென்றால் மிகவும் கவனத்தோடு பேச வேண்டி இருக்கிறது.

ஆனால் "படிக்கும் சிறு குழந்தைகளுக்குப் பாட படிப்பைத் தவிர வேறு பேச்சு என்னத்திற்கு?" என்றசாலமாக வேறிவிட்டது. ஏனெனில் படிப்பே மோசமானதாக இருப்பதால் அப் படிப்பைத் திருத்துவதற்கு ஆன உங்களிடத்தில் உணர்ச்சி தோன்ற வேறு பேச்சு அவசியமாகிவிட்டது.

### உங்கள் படிப்பின் தன்மை

முதலாவது உங்கள் படிப்புக்கு லட்சியமே இல்லை, லட்சிய மற்ற படிப்பு என்பது ஒருபுறம் இருந்தாலும், என்ன படிப்புப் படிப்பது என்பது பள்ளிக்கூடத் தலைவருக்கும் ஆசிரியர்களுக்கும் கூட சம்பந்தமற்றதாகும்; இதனால் இப்படிப்பினால் ஏற்படும் பயன் என்ன என்றாலோ அறவும் தானாக வருவது என்பட்டால் அதுதான் பயனே ஒழிய மற்றபடி நிச்சயமான பயன் என்ன? என்ன ஏற்படும் என்று கருதுவதற்கில்லை. படிப்பது என்பது வெறும் பேச்சளவில் "அறிவுக்கு ஆக, அறிவு விருத்திக்கு ஆக" என்று சொல்லப்படுகிறது.

ஆனால் படித்தவர்களுக்கு அறிவு விருத்தியாகிறதா? படித்தவர்கள் அறிவாளிகளாக இருக்கிறார்களா? என்றால் ஆம் என்று சொல்ல முடியவில்லை. இந்த அறிவு என்பதுகூட ஒரு பொருள் அருத்தத்திற்குக் கட்டுப்பட்டதாய் இல்லாமல் எதைப் படித்தானோ அதில் அறிவுள்ளவன் என்றுதான் சொல்லக் கூடியதாய் இருக்கிறது. அந்த ஒவ்வொரு படிப்பில் அதாவது படித்த படிப்பின் அறிவு ஆவது சரியாக இருக்கிறதா என்றால் அதுகூட சரியாக இல்லாமல் ஒன்றுக்கொன்று முரணான அறிவு ஏற்படும்படியாக இரண்டு கருத்துள்ள, அதாவது முரண் கருத்துள்ள படிப்பேதான் கொடுக்கப்படுகிறது. அந்தத் தன்மையை எடுத்துக்கொண்டாலும் மாணவர்களுக்கு அறிவுப் படிப்பும், மூடநம்பிக்கைப் படிப்பும் இரண்டும் தரப்படுகிறது. இதனால் மாணவர்கள் பகுத்தறிவும், அதற்கு மாறான மூடநம்பிக்கையும் இரண்டும் கொண்டவர்களாகவிடுகிறார்கள். மாணவர்கள் மாத்திரமல்லாமல் படிப்பை முடித்த பெரியவர்களும், உபாத்தியாயர்களுங்கூட மூடநம்பிக்கையுடையவர்களாகவே இருக்கவேண்டியவர்களாகிறார்கள்.

உதாரணமாக,

சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், வான சாஸ்திரம், உடற்கூறு, உலோக விஷயம் முதலியவைகளின் படித்துத் தேறியவர்களில் யாருக்காவது இது சம்பந்தமான மூடநம்பிக்கைக் கொள்கை இல்லாத சரியான அறிவு இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

சரித்திரம் படித்தவன் இராமாயணம் பாரதம் முதலிய புராணக் கதையும், சரித்திரத்தில் சேர்த்துப்படித்து இராமனும் பரதனும் இந்த நாட்டை ஆண்டான் என்றும், அது இன்ன காலம் என்றும், இந்த நாட்டிக்கு பரத தேசம் என்பது பெயர் என்றும் கருதிக் கொண்டு அனுபவத்திலும் அதற்கு மற்ற வண்ணம் நடந்து பாரதமாதாவை வணங்கிக்கொண்டு திரிகிறான். நிஜமாக நடந்த சரித்திர உண்மைகள் நிஜமானபேர்கள் நபர்கள் அதன் காலங்கள் ஆகியவை சரித்திரம் படித்தவர்கள் என்பவர்களுக்கு சரியாகத் தெரிவதில்லை. நடவாததும், நடந்ததாக நம்ப முடியாததும், அதற்கும் காலம் நிர்ணயிக்க முடியாதது மான அறிவுக்குப் பொருந்தாத காரியங்களுக்கு அதிக விபரம் தெரிகிறது. ஆனால் நடந்தவைகளுக்கு சரியான விபரம் தெரிவதில்லை. சேர, சோழ, பாண்டியர், நாயக்கர் ஆகியவர்களும், அவர்களது வர்க்க, அண்ணன் தம்பிகளும், மனைவி மக்களும் ஆண்ட நாட்டெல்லைகளும் முறைகளும் முடிவுகளும் சரித்திரம் படித்த 100க்கு 90 மாணவர்களுக்கு விபரம் சொல்லத் தெரியாது. தசரதனுக்கும், ராமனுக்கும், கிருஷ்ணனுக்கும், பாண்டவருக்கும், துரியோதனாதிகளுக்கும் இரணியனுக்கும், பலிச்சக்கிரவர்த்திக்கும், மனுநீதி கண்ட சோழனுக்கும் அண்ணன் தம்பிமார்கள் மனைவி மக்கள்கள் அவர்கள் கணவர்கள் இவ்வளவு என்று 100க்கு 99 மாணவர்களுக்குத் தெரியும்.

பூகோளம் படித்தவனுக்கு உலகப் பரப்பு, அதன் பிரிவுகள் சரியாக ஞாபகத்தில் இருக்காது. ஆனால் இல்லாததும் இருக்கமுடியாததுமான மேல் ஏழுலோகம் கீழ் ஏழுலோகம் அதன் வர்ணனை பலன், தன்மை இருப்பதாக முழு ஞாபகமாகத் தெரியும். வான சாஸ்திரம் படித்தவனுக்கு சூரிய சந்திரனின் உண்மைத் தன்மை கிரகணங்களின் உண்மைத் தன்மை, இயக்கம், அதன் சேதாரம் விவரமான காரணம் ஆகியவை சரிவரத் தெரியாது. ஆனால் "சூரியனுக்கு 16 குதிரை" "சந்திரனுக்கு கலை வளரவும் தேயவும் சாபம்" "இவர்களது மனைவி மக்கள் அவர்களது விபசாரம்" "ராகு கேது விழுங்குதல் அதனால் கிரஹணம்" அதற்குப் பரிகாரம் என்பது முதலிய கற்பனைக் கதைகள் யாவருக்கும் உண்மையென்ற எண்ணமும், அதை அனுசரித்த அனுபவமும், அதற்கு ஏற்ப நடப்பும் தெரியும். விஞ்ஞானத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உதாரணம், விஞ்ஞானப் படிப்பின் இன்றைய நிபுணர்களைப் பார்த்தாலே விஞ்ஞானப் படிப்பின் தன்மையும், பயனும் நன்றாய் விளங்கும். இப்படியாகப் படிப்புக்கும், அறிவுக்கும், பெரும்பாலும் உண்மைக்கும்; நடப்புக்கும் சம்பந்தமில்லாத மாதிரியான படிப்புதான் இன்று பள்ளிப் படிப்பாகப் போய்விட்டது.

### படிப்பால் ஏற்படும் பயன்

இது தவிர இனி படிப்பினால் அதாவது ஒழுக்கம், நாட்டுப்பற்று, இனப்பற்று, சமாச ஞானம் முத

சியலை ஏதாவது ஏற்படுகிறதா? அல்லது படித்த மக்களிடம் இவை ஏதாவது இருந்து வருகிறதா? என்றால் அதுவும் சிறிதும் சரியானபடி இல்லாமல் வெறும் கற்பனைக்குணங்களும், ஊற்றுகளும்தான் பெரிதும் காணப்படுகின்றனவே தவிர உண்மையானதும் இருக்கவேண்டியதுமானவைகள் அருமையாகவே இருக்கின்றன. இதை விரிக்கில் மிகமிக நீளும்.

ஆகவே இம்மாதிரி படிப்பைப் படிக்கின்ற பிள்ளைகள் எவ்வளவு சிறிய பிள்ளைகளானாலும் இவைகளைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுவதால் கேடு எதுவும் ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை.

## ஆசிரியருடன் விவாதம் புரியுங்கள்

உங்களுக்கு உபாத்தியாயர்கள் இப்படிப்பட்ட படிப்பை கற்றுக் கொடுக்கும்போது இந்தமாதிரியான காரியங்களைப்பற்றி சிந்தித்து, நீங்கள் இது சரியா என்று கேட்பதன்மூலம் உங்கள் ஆசிரியர்களால் உண்மை அறிவிக்கப்படுவீர்கள். பரீட்சையில் பாசாவதற்கு நீங்கள் படித்ததையும், சொல்லிக்கொடுத்ததையும் எழுதினாலும் உங்கள் அறிவுக்கும் அனுபவத்திற்கும் எது உண்மை என்பதாவது விளங்கக்கூடும். ஆதலால் முடிந்த இடங்களில் விளக்கம் கேளுங்கள். கட்டுப்பாடாகவும் அதிகப்படியாகவும் மாணவர்கள் விளக்கம் பெற விரும்புவீர்களானால் ஆசிரியர்களும் உங்களுக்கு விளக்கம் சொல்லவாகிலும் பயன்படும்படி அறிவுபெறுவார்கள். இப்படிப்பட்ட விளக்கம் தெரிந்த ஆசிரியர்கள் பெருகுவார்களானால் மக்களுக்குப் படிப்பதால் ஏற்படும் மடமையாவது காலப்போக்கில் குறையும் என்று கருதுகின்றேன். இதை ஏன் உங்களிடம் சொல்லுகிறேன் என்றால் இதுவரை கல்வி இலாகாக்காரர்கள் இந்தக் குறைபாட்டைப் பற்றி சரியானபடி சிந்தை செலுத்தவே இல்லை. படிப்பவர்களுக்கு இரட்டை மனப்பான்மை அதாவது சரியானதும், போலியும் கற்பனையுமானதுமான ஆகிய இரு முரண்பட்ட மனப்பான்மை உண்டாகும்படியாகவே கல்விமுறை செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஆகத்தான்.

எனவே இதுவரை உங்களுக்குப் படிப்பைப் பற்றிச் சில கூறினேன்.

## திராவிடக் கழகம் ஏன்?

இனி உங்கள் கழகத்தைப் பற்றிச் சில கூற ஆசைப்படுகிறேன். திராவிட மாணவர் கழகம் என்பதில் திராவிடர் என்கின்ற பெயர் ஏன் வைக்கவேண்டியதாயிற்று? இத்தனை நாள் இல்லாமல் இப்போது ஏன் எங்கு பார்த்தாலும் திராவிடர் திராவிடர் என்று சொல்லப்படுகிறது?

இதுவரை இருந்துவருகிற பிரிவுகள், பேதங்கள் ஆகியவைகள் போதாமல் இது வேறு ஒரு புதிய பிரிவா?, என்றெல்லாம் நீங்கள் கேட்கப்படலாம். அவற்றிற்கு உங்களுக்கு விடை சொல்லத் தெரியவேண்டும். அதை நீங்கள் தெரிந்துகொள்ளாவிட்டால் திராவிடர்களின் எதிரிகள் இந்தத் திராவிடம் என்பது ஒரு புது பிரிவினையை உண்டாக்கக் கூடியது என்றும், இது மக்களுக்குள் துவேஷத்தையும், பேதத்தையும் உண்டாக்கக் கூடியதென்றும் சொல்லி திராவிட மக்களின் மேம்பாடு முன்னேற்ற உணர்ச்சியையும் முயற்சியையும் கெடுக்கப் பார்ப்பார்கள். இதுவே எதிரிகளின் வழக்கம்.

## திராவிடம்-திராவிடர் என்பது

திராவிடம் என்றும், திராவிடர் என்றும் சொல்லுவது நாமாக ஏற்படுத்திய புதிய கற்பனைச் சொற்கள் அல்ல. இதுநம்நாட்டிற்கும் நம் மக்களுக்கும் குறிப்பிடும் ஒரு சரித்திர சம்மந்தமான பெயர்களாகும். இவை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே வழங்கிவரும்பெயர்களுமாகும் உங்களுக்கு நன்றாய் இந்த உண்மை விளங்கவேண்டுமானால் நீங்கள் உங்கள் பள்ளியில் இன்று படிக்கும் இந்த நாட்டு (இந்துதேச) சரித்திர புத்தகத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் எந்த சரித்திர புத்தகத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் விஷய முதல் பக்கத்தில் திராவிடம் திராவிடர் என்கின்ற தலைப்புக்கொடுத்து அவற்றின் வரலாறுகள் எழுதப்பட்டிருக்கும். இவை முடிந்த அடுத்த பக்கத்தை திருப்பினீர்களானால் அதில் ஆரியம் ஆரியர் என்கின்ற தலைப்பு கொடுத்து சரியாகவோ தப்பாகவோ அவற்றின் வரலாறுகள் எழுதப்பட்டிருக்கும். எனவே இவை அதாவது திராவிடர், ஆரியர் என்பவை உங்கள் குழந்தைப் பருவத்தில் பள்ளிப் படிப்பில் உங்களுக்கு ஊட்டப்பட்ட சேதிகளும், வெகு காலத்திற்கு முன் ஏற்பட்ட உண்மைகளும் ஆராய்ச்சி சுவடிகளில் காணப்படும் சேதிகளும் தானே ஒழிய இன்று புதிதாக நானோ மற்றும் வேறு யாரோ கொண்டுவந்து புகுத்தியது அல்ல. இதுவே தான் இந்நாட்டுச் சரித்திரத்தின் A. B. C. ஆகும். இதிலிருந்து பார்த்தாலே நம்முடையவும் நம் நாட்டினுடையவும் தன்மைகள் ஒருவாறு நமக்கு விளங்கிக் கொள்ள முடியும் என்பதற்கு ஆகவே அதை ஞாபகப்படுத்தும் படியான மாதிரியில் அனுபவத்தில் வழக்கத்திற்கு நினைவுக்கு வரும்படி செய்ய இன்று அதைப்பற்றி (திராவிடத்தை பற்றி) சிறிது அதிகமாய் உங்களிடம் பேச வேண்டி இருக்கிறது.

## இதுகூட ஏன்?

இதுகூட ஏன்?, இன்று புதிதாக சொல்லப்படவேண்டும் என்று கேள்க்கப்படலாம். எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இருந்தே இருந்துவருகிற திராவிடர் ஆரியர் என்கின்ற வார்த்தையை நாம் இன்று அமலுக்கு, பழக்கத்திற்கு அதிகமாய்க் கொண்டுவருவதால் அந்தக்கால நிலைக்கு நாம் போகவேண்டும் என்கின்ற கருத்து அதில் இருப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. பிற்போக்குக்கு ஆக நாம் அப்படிச் சொல்லவில்லை. நமக்குச் சிறு பிராயத்தில் சரித்திர மூலம் படிப்பிக்கப்பட்டிருக்கும் அனுபவத்தில், உணர்ச்சியில் ஏன் நம் மக்களுக்குள் நினைவிலிருக்க முடியாமல் போய்விட்டது என்று நாம் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொள்ள வேண்டுமே ஒழிய, ஏன் நமக்கு இப்போது ஞாபகப்படுத்தப்படுகிறது என்ற கேள்விக்கு இடமே இல்லை. ஆனாலும் ஏன் என்றால்,

### ஏற்பட்ட கேடு

அதாவது, திராவிடர் என்ற நினைவில்லாததால் நமக்கு என்ன கேடு ஏற்பட்டது என்று கேட்டால் அந்த நினைவு நமக்கு இல்லாததால் தான் நாம் 4-வது, 5-வது ஜாதியாய் சமுதாயத்திலும், தற்குறிகளாய்க் கல்வியிலும், கூலிகளாய்த் தொழிலிலும், ஏழைகளாய் வாழ்க்கையிலும், அன்னிய ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாய் அரசியல், ஆத்மார்த்த இயல் என்பவற்றிலும், காட்டுமிராண்டிகாலத்து மக்களாய் அறிவு, ஆசாரம், தன்மானம் ஆகியவைகளிலும் இருந்து வருகிறோம். இது இன்று நேற்றல்லாமல் நம்மை திராவிடர் என்பதையும் நமது திராவிடநாடு என்பதையும் மறந்த காலம் முதல் அதாவது சுமார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே இருந்துவருகிறோம். நாம் நம்மை திராவிடர் என்று கருதினால், நினைவுறுத்திக்கொண்டால் உலக நிலையில் திராவிடர் (நம்) நிலை என்ன? தன்மை என்ன? நாம் எப்படி இருக்கவேண்டியவர்கள்? எப்படி இருக்கிறோம்? என்பது உடனே தென்படும். என்னவெனில்,

நான் முன் கூறின இழிநிலையும் குறைபாடுகளும் இந்த நாட்டில், ஏன் உலகிலேயே திராவிடர்களுக்குத்தான் (நமக்குத்தான்) இருக்கிறதே தவிர திராவிடரல்லாதவர்களுக்கு இல்லவே இல்லை. திராவிடமல்லாத வேறு நாட்டிலும் இல்லை.

இந்நாட்டு மனித சமுதாயத்தில் ஒருகூட்டம் அதாவது, ஆரியர்கள் பிறவி உயர்வாயும், பிறவி காரணமாய் உயர்வாழ்வாயும், மற்றொரு சமுதாயம் அதாவது, நாம்—திராவிடர் பிறவி இழிமக்களாயும், பிறவி காரணமாய் தாழ்ந்த இழிந்த வாழ்வாயும் இருப்பது இதுவரை மக்களுக்குத் தென்படாததும், தென்பட்டாலும் அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியமில்லாததும், சிந்தித்தாலும், முயற்சி செய்யாமலும், முயற்சி செய்தாலும் வெற்றி பெறாமலும் போனதற்கு காரணம் என்ன?, என்பதை சிந்தியுங்கள். நீங்கள் உங்களைத் திராவிடர்கள் என்று கருதாததினால், நினைவுறுத்திக்கொள்ளாததால் இன்றைய இழிவுக்கும், தாழ்மைக்கும், கீழ்நிலைமைக்கும் உரியவர்கள் என்று உங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியதேற்பட்டுவிட்டது. அக்கட்டுப்பாட்டை உடைக்க-நீங்கள் திராவிடர்கள் என்று கருதி முயலாமல் அந்தக் கட்டுப்பாட்டிலிருந்துவிலக ஆசைப்பட்டதால்தான் அக்கட்டு உங்கள் ஆசையை அனுமதிக்கவில்லை. இதுவரையில் இழிநிலை கட்டுப்பாட்டிலிருந்து தப்ப, மீள முயற்சித்தவர்கள் நம்மில் எவர்களாவது இருப்பார்களானால் அவர்கள் அத்தனை பேரும் தோல்வி அடைந்து பழய நிலையிலேயே இருப்பதற்கு காரணம் இதுவேயாகும்.

சிறைச்சாலைக்குள் இருப்பவன் எந்த வழியில் சிறைக்குள் சென்றானோ அந்தவழியில் வெளிவர முயற்சிக்க வேண்டுமே ஒழிய சிறைக் கதவை, பூட்டை கவனியாமல் அது திறக்கப்படவும், உடைக்கப்படவும் முயற்சிக்காமல் வெறும் சுவரில் முட்டிக்கொள்வதால் எப்படி வெளிவரமுடியும்? திராவிடன் இழிவு தாழ்வு என்னும் சிறைக்குள் சிக்குண்டதற்கு காரணம் அவன் தன்னை திராவிடன் என்று உணராமல் ஆரியன் வசப்பட்டு ஆரியத்திற்கு, ஆரிய மதம், கலை, ஆச்சார அனுஷ்டானங்களுக்கு அடிமைப்பட்டதல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லமுடியும்? ஆரியத்தின் பயனாய் ஏற்பட்ட சிறைக்கூடத்தில், கட்டுப்பாட்டின் கொடுமையில் இருந்து வெளிவர விரும்புகிறவன் கையிலும்காலிலும் பூட்டியிருக்கும் ஆரிய குட்டையையும் விலங்கையும் தகர்த்தெறிய சம்மதிக்க வேண்டாமா? அவைகளை தகர்த்தெறியாமல் எப்படி வெளிவர முடியும்? விலங்கோடு வெளிவந்தால் தான் பயன் என்ன? ஆகவேதான் ஆரியக் கொடுமை, ஆரியக் கட்டுப்பாட்டால் நமக்கு ஏற்பட்ட இழிவு நீங்க நாம் ஆரியத்தை உதறித் தள்ளவேண்டும். ஆரியத்தை உதறித்தள்ளுவதற்குத்தான் நம்மை நாம் திராவிடர் என்று சொல்லிக்கொள்ளுவதாகும். அதற்குத் தூண்டுகோல்தான் திராவிடர் என்பது.

எப்படி ஒருவன் பறையனாய், சக்கிலியாய் இருப்பவன், அவன் இஸ்லாம் என்றாகிவிட்டால் அந்தப்

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)


## புரட்சிக் கவிஞர்

அவர்கள் உருவமைந்த அழகிய படம் கல்லச்சுமுறையில் வெளிவந்துள்ளது. கவி அவர்கள் கையெழுத்துடன் அமைந்துள்ளது. ஒன்றின் விலை 0—2—0 மார்ஜிரிக்காக 0-2-9 தபால் பில்லைகள் அனுப்பித்தருக. விற்பனையாளர்களுக்கு தக்க லாபம் தரப்படும். விபரங்கட்கு:—

**திராவிடன் பதிப்பகம்,**
தபால்பெட்டி 18, வேலூர். (வ. ஆ.)

ரஜாவில் வந்திருக்கும் நமது
**14-ம் சேனை வீரர்கள்;**

## கவர்னர் யுத்த நிதியில்

துருப்புக்கள் வசதி நிதிக்கு என்று குறிப்பிட்டு
பணம் அனுப்பப்படுவதை அறிந்தால்
**ஜாப்களை ஒழித்துக்கட்ட**
அதிக சந்தோஷத்துடன் போர்முனைக்குத் திரும்பிச் செல்வார்கள்
அவர்கள் தங்கள் வேலையை அறிவார்கள்
அதைப்போன்று நாமும் நமது வேலையை
உணர்ந்து நடப்போமாக

குடி அரசு

1945 ௵ ஜூலை ௴ 14௳

# வேவல் தவறு

மதத்தின் பேராலும் வகுப்பின்படியும் பதவிகள் கொடுப்பதாக சர்க்கார் சம்மதித்துவிட்ட பிறகு மதத்திற்கு ஆகவும் வகுப்புகளுக்கு ஆகவும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஸ்தாபனங்களை சர்க்கார் மதிக்கவில்லை என்றால் அது முன்னுக்குப்பின் முரண் ஆகும்.

அன்றியும் அப்படி மத வகுப்பு ஸ்தாபனங்களை ஏற்காமல் பதவி அளிப்பது அந்தந்த ஸ்தாபனங்களுக்கு கேடு செய்ததுமாகும்.

உதாரணமாக ஆதிதிராவிடர்களுக்கு தனித்தொகுதி சர்க்காரால் வழங்கப்பட்டதை காங்கரஸ் மறுத்து சட்டசபைக்கு தனித்தொகுதிப்படி ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 15 ஸ்தானங்களுக்கு பதிலாக பொதுத்தொகுதியில் காங்கரஸ் தொகுதியின் மூலம் 30 ஸ்தானங்கள் வழங்கப்பட்டன.

அந்த முப்பது ஸ்தான முறைப்படி நடந்த தேர்தலில் தோழர் சிவராஜ் தோல்வியுற்றார். எம். சி. ராஜா வழவழா முறையில் ஸ்தானம் பெற்றார். பாக்கி 29 ஸ்தானங்களுக்கும் கோவில் நுழைவு தீர்மானத்துக்குக் கூட விரோதமாய் ஓட்டுக் கொடுக்கக் கூடியவர்களே வந்தார்கள்.

அதுபோலவே பார்ப்பனரல்லாதாரில் காங்கரஸ் பேரால் சட்டசபைக்கு வந்தவர்கள் தமிழர்களுக்கு ஆரியமொழியை (இந்தியை) கட்டாயபாடமாகப் புகுத்தியதை எதிர்த்தவர்களில் 1200 பேர்களை சிறை செய்து கொடுமைப்படுத்தி சிலரை சிறையிலேயே இறக்கச் செய்தார்கள். சுயமரியாதைக்காரர் என்பவரும் ஒரு காலத்தில் இந்தியை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தவருமான தோழர் எஸ். இராமநாதன் அவர்கள்கூட முன்பு தான் குறைகூறிவந்த காங்கரசில் பதவிக்கு ஆக சேர்ந்து இந்தியை எதிர்த்தவர்களை சிறை செய்யவேண்டி வந்தது. மற்றும் அநேக தமிழர் காங்கரசால் பதவி பெற்றதற்கு ஆக தமிழர்களைச் சிறைப்படுத்தவேண்டியதாயிற்று. அப்படி இருக்க அந்தந்த மத வகுப்பாரைத் தெரிந்தெடுக்க உரிமை வழங்கவில்லையானால் எப்படி மத வகுப்பு பேதங்களை தகராறுகளை நேர் செய்ய முடியும் என்று கேட்கிறோம்.

ஜின்னா சாயபுவுக்கு முஸ்லிம்களின் நலனைப் பாதுகாப்பதே முக்கிய நோக்கம்; டாக்டர் அம்பேத்காருக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தைக்காப்பதே முக்கிய நோக்கம். இவர்கள் இருவரும் சுதந்திரத்திற்கோ வெள்ளை ஆட்சியை மாற்றி புரௌன்-கபில நிற ஆட்சி ஏற்படுத்துவதிலோ எதிர் அபிப்பிராயம் கொண்டவர்கள் அல்ல. அப்படி இருக்கும்போது அந்த வகுப்பார் பங்குக்கு அந்த வகுப்புத் தேவைகளை ஒப்புக்கொள்ளாத மற்றவர்களை எப்படி உரிமையாக்க முடியும் என்று கேட்கிறோம்.

காங்கரஸ்காரருக்கு ஜாதி மத பேதம் இல்லை யென்றும் தேசமே பிரதானம் என்றும் கருத்து இருந்தால் அவர்கள் ஜாதி மதம் பார்க்காமல் தங்களுக்குக் கிடைக்கும் பங்கை தகுதி உள்ளவர்களுக்கு வழங்கலாமல்லவா? அப்படி இல்லாமல் ஜாதி மத வகுப்புப்படி நியமிக்கும் அதிகாரம் தங்களுக்கும் இருக்க வேண்டும் என்று கேட்பதற்கு என்ன நியாயம் இருக்க முடியும்.

மௌலானா ஆசாத் அவர்களையும் தோழர் முனிசாமிப் பிள்ளை அவர்களையும் நியமிக்க காங்கரசுக்கு அவசியம் என்ன வந்தது என்று கேட்கிறோம். கலிக்குசமான் சாயபுவைவிட ஆசாத் சாயபு கெட்டிக்காரரா அல்லது டாக்டர் அம்பேத்கார், தோழர் சிவராஜ் ஆகியவர்களைவிட முனிசாமிப் பிள்ளை கெட்டிக்காரரா? அப்படி இருந்தால் பண்டித நேருவையும், அம்ருத கௌரியையும், சர்தார் பட்டேலையும் நிறுத்திவிட்டு மௌலானா ஆசாத் அவர்களையும் தோழர் முனிசாமிப்பிள்ளையையும் போட்டுக்கொள்ளலாம் அல்லவா என்று கேட்கிறோம்.

காங்கரஸ் வகுப்பு முறையை அலட்சியம்செய்து ஒருகுறிப்பிட்ட வகுப்பு ஆதிக்கத்திற்கு காங்கரசை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டதாலேயே ஜாதி மத வகுப்பு உணர்ச்சிகள் நாட்டில் கிளம்ப நேரிட்டது. மறுபடியும் அதைப் பலப்படுத்துவதற்கு ஆகவே அவ்வளவு உணர்ச்சிகளைத் தப்பான வழியில் காங்கரஸ் நசுக்கப் பார்ப்பது முட்டாள்தனமேயாகும் என்பதோடு முட்டாள்தனமாகவே முடியும் என்று கூறுவோம்.

முஸ்லிம் லீக்கில் இல்லாத முஸ்லிம்களுக்கும் ஆதிதிராவிட லீக்கில் இல்லாத ஆதிதிராவிடருக்கும் திராவிட லீக்கில் இல்லாத திராவிடருக்கும் இடம் கொடுத்து அவர்களை தன், தன் இனத் துரோகத்திற்கு தூண்டிவிட முயற்சிப்பது காங்கரசேயாகும் என்று சொல்லுவதோடு இந்த கெட்ட காரியமே இந்த நாட்டை முன்னேற்றத்திற்கு இடமில்லாமல் கீழ் நிலையில் வைத்து இழிவுக்கும் அன்னிய சுரண்டலுக்கும் ஆளாக்கிவருகிறது. இது ஆரிய நலத்துக்கு ஏற்ற ஒருசூழ்ச்சி என்றாலும், இதைப் பாமர மக்கள், வாலிபர்கள் இனியும் அனுமதிப்பது அறியாமையும் பொறுப்பற்ற தன்மையுமாகும் என்பது மாத்திரமல்லாமல், வேவல் பிரபு விஷயத்தை குழப்பாமல் ஒரு கொள்கையில் இருந்து மாறி பகுத்தறிவோடு காரியம்செய்து தனது உண்மைத் தன்மையை விளக்கிக் கொள்ளவேண்டுமாய் ஆசைப்படுகிறோம்.

ஏனெனில் ஆரம்பத்தில் வேவல் பிரபு இந்தப்படி சொல்லி இருப்பாரானால் அது புத்திசாலித்தனமாய் இருந்திருக்கும். அதாவது சர்க்கார் இன்னின்ன ஜாதி மத வகுப்பு முறைகளை ஒப்புக்கொண்டு அவரவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி பதவி அளிக்க முடியும் என்றும் அந்தந்த ஜாதி மத வகுப்பு பாதுகாப்பு அவரவர்களையே சேர்ந்தது என்றும் தகராறு வந்தால்தான் தாம் (வைஸ்ராய்] அதில் பிரவேசிக்க வேண்டி வரும் என்றும் சொல்லி ஆரம்பித்து இருந்தால் விவகாரம் இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்காது. அதை விட்டுவிட்டு முஸ்லிம்களுக்குப் பகுதி இந்துக்களுக்குப் பகுதி என்றால் அது என்ன

ரோஜா முத்தையா

முறையைச் சேர்ந்ததாகும். இந்துக்கள் என்றால் யார் யார்? தங்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ளும் மக்களின் கதி என்ன ஆவது? செட்யூல் வகுப்பு, என்பதனால் எந்தெந்த வகுப்பு ஜாதி அதில் சேருகிறது? ஜாதி இந்து என்று சொல்வதில் செட்யூல் வகுப்பு அல்லாத சில வகுப்பும், சட்டப்படி ஜாதி இந்துக்கள் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருக்கிறதே? இவர்கள் கதி என்ன? அன்றியும் செட்யூல் வகுப்பார் என்றால் அவர்கள் இந்துக்களா? இந்துக்கள் அல்லாதவர்களா? எப்படி சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்? இந்த பேதங்கள் ஒழிவதற்கு வேவல் திட்டத்தில் இருக்கும் வசதி என்ன? இந்த பேதங்கள் இப்படியே இருந்தால் இதற்கு பரிகாரம்தான் என்ன? என்பவைகளைப்பற்றிசிந்தித்து வேவல் திட்டம் வெளியாயிற்றா அல்லது அவசர அவசரமாக ஏதோ ஒரு முடிவு ஏற்பட்டால் போதும் என்று வேவல் திட்டம் வெளியாயிற்றா என்பது யோசிக்கத்தக்கதாகும். பின்னையதுவானால், வேவல் திட்டம் நழுவு என்றுதான் சொல்லவேண்டும்.

## "சுயமரியாதைச் சங்கம்?"

மதுரையில் தோழர்கள் என். ராமசந்தன், சாமி சிதம்பரனார், அ. பொன்னம்பலம், W. P. A. சௌந்திரபாண்டியன், வி. வி. ராமசாமி முதலியோர் சேர்ந்து சுயமரியாதை சங்கமென்று ஒன்றை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரிஜிட்டர் செய்துகொண்டிருப்பதாக சில தோழர்கள் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். இது உண்மையானால் இதுவும் இப்போது சென்னையில் தானம்போடும் போலி ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம் போல ஒரு போலி சுயமரியாதைக் கட்சியின் தானம் என்றும், இதற்குஆக யாரும் கவலைப்படவேண்டியதில்லை என்றும் ஏற்கனவே இருந்து நடந்து வருகிற சுயமரியாதை இயக்கம் அது நன்பாட்டில் வேலை செய்து வரும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)
## 14-7-45ந்தேதி வரை 33547 அங்கத்தினர்கள் ரூ. 3351—6—0சந்தா

ஜூலை மாதம் 14-ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6008 | 9. சென்னை | 1822 |
| 2 தஞ்சை | 5933 | 10. மதுரை | 1481 |
| 3. சேலம் | 4554 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4. திருச்சி | 4018 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சினாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2318 | 13. பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2270 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1844 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 33547. சந்தா ரூ. 3351-6-0

போலி ஜஸ்டிஸ் கட்சியாரும், சென்னையில் ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ரிஜிஸ்டர் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்திருப்பதாகவும் தெரிகிறது. அதைப் பற்றியும் யாரும் கவலைப்படவேண்டியதில்லை என்றும், இப்போது ஏற்கனவே இருந்து நடந்துவரும் ஜஸ்டிஸ் கட்சி, அதாவது தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்று இருந்து சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் என்று திருத்தி பெயர் இடப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி எப்போதும்போல் வேலை நடந்து வரும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சி ஆகிய இரண்டும் தொண்டாற்றுகிறதாய், அதாவது கஷ்டப்பட்டு வேலைசெய்ய வேண்டியவைகளாய் இருப்பதால் யாருடைய போலித் தன்மையும் போட்டித்தன்மையும் அதற்கு எவ்வித இடையூறும் விளைவித்துவிட முடியாது. ஆதலால் இயக்கப்பற்றுள்ள யாவரும் எவ்விதக் குழப்பமும் கொள்ள வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். கூடியவரை இனியும் அங்கத்தினர்களைச் சேர்த்து ஸ்தாபனத்தை, இயக்கப் பிரசாரத்தைப் பலப்படுத்தக் கோருகிறோம்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தனது தோழர்களுடன் 13-7-45-ந் தேதி காலை சென்னையில் இருந்து கிராண்ட்டிரங் எக்ஸ்பிரஸ்ஸில் ஆந்திரநாட்டு சுற்றுப் பிரயாணம் செய்ய சென்று இருக்கிறார். 17ந் தேதிக்குப் பிறகு திரும்புவார்.

## தஞ்சை மாவட்டத்தில் திராவிட மாணவர் பிரசாரம்

தோழர்கள் E. V. K. சம்பத், S. கருணானந்தம் ஆகியோர் கீழ்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

15-7-45 நலைஞாயர்
16— கீழையூர்
17— வெங்கிடங்கால்
18— சிக்கல்
19— தாராசுரம்
20— அய்யம்பேட்டை
21— ஓய்வு
22— பாண்டிச்சேரி
23— கடலூர்
24— ஓய்வு
25— சிதம்பரம்

V. S. P. யாகூப்,
ஆர்கனைசர்,
விஜயபுரம் போஸ்டு, திருவாரூர்.

# N. S. K., பாகவதர் அப்பீல் அனுமதிக்கப்பட்டது

லக்ஷ்மிகாந்தம் கொலைவழக்கில் சென்னை ஹைக்கோர்ட் செஷன்ஸ் கோர்ட்டாரால் ஆயுள் தண்டனை யடைந்த தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் முதலியவர்கள் அப்பீல் மனுக்கள் 12-7-45 ஆந்தேதி சென்னை ஹைக்கோர்ட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் மனுக்களில் 72 காரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வழக்கு விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

## வருந்துகிறோம்

பெரிய சங்கீத வித்வானும், சங்கீத கலாநிதியுமான தோழர் டி. பொன்னையாபிள்ளை அவர்கள் தமது 57வது வயதில் தஞ்சை மேலவீதியிலுள்ள தமது வீட்டில் 2-7-45ந்தேதி இரவு இயற்கை யடைந்தார் என்பதையறிய வருந்துகிறோம். அவர் தமிழ்ச் சங்கீதம், உலகில் தலைசிறந்து விளங்கவேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வங்கொண்டிருந்தார் என்பது அவரால் இயற்றப்பட்ட சங்கீத நூற்களிலிருந்தன்று விளங்கும். மேலும் ஈரோட்டில் 1930ல் நடைபெற்ற சங்கீத மகாநாட்டிற்குத் தலைமைவகித்து ஆற்றிய தலைமையுரையைப் பார்த்தாலே மேலும் நன்கு விளங்கும். சென்னை சர்வகலாசாலையில் சங்கீத பேராசிரியராகவும், அண்ணாமலை சர்வகலாசாலையிலுள்ள சங்கீத கலாசாலையின் பிரின்ஸ்பாலாகவும் இருந்த காலையில் அவர் தமிழ்ச்சங்கீத உயர்வுக்காகவே அரும்பாடு பட்டுவந்திருக்கிறார். இப்பொழுது நடைபெற்றுவரும் தமிழிசைக் கிளர்ச்சி தோன்றுவதற்கு முன்னிருந்தே இத்துறையில் அருந்தொண்டாற்றி வந்திருக்கிறார். தஞ்சை பெருவுடையான் பேரிசை, தமிழ் அன்னைக்கள் 6ஆம் தொகுதி, இசை, இயல் ஆகிய நூற்களை இயற்றி தமிழிசையை வளர்த்துவந்திருக்கிறார். தமிழிசைக்காக அவர் ஆற்றிவந்த சேவையைத் தமிழ்நாடு என்றும் மறக்கமுடியாது என்பதோடு அதற்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் விழிப்புற்று புத்துணர்ச்சி பெற்று தங்கள் இழந்த உரிமையைப் பெற பாடுபடும் இந்த வேளையில் தோழர் பொன்னையா பிள்ளை அவர்கள் மறைந்தது தமிழ்நாட்டிற்குப் பெரிய நஷ்டமாகும். அன்னாரைப் பிரிந்து வருந்தும் அன்னார் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## புதுச்சேரி திராவிடர் கழகத் திறப்பு விழா

### பெரியார் தலைமையில்

மேற்படி கழகத் திறப்பு விழா 21-7-45-ந் தேதி பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர் டி. ஷண்முகம் பிள்ளை திறந்துவைப்பார். தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கொடியேற்றுவார். தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, ஏ. பி. ஜனார்த்தனம், ஆர். நெடுஞ்செழியன், கே. அன்பழகன், ஏ. பெருமாள் (புதுவை), அப்துல் கரீம் (விழுப்புரம்), சத்தியவாணி முத்து (சென்னை), மஞ்சுளாபாய் வை. ச. ஆகியவர்கள் படங்கள் திறந்து வைப்பார்கள்.

கனக. சுப்புரத்தினம்
(பாரதிதாசன்)
வரவேற்புக் கழகத் தலைவர்.
S. சிவப்பிரகாசம்,
S. கோவிந்தராஜு,
செயலாளர்கள்.

## கோவை ஜில்லா திராவிடர் கழகம், ஈரோடு

ஷை கழகத்தின் ஆதரவில் ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் ஈரோட்டில் கோவை ஜில்லா 2-வது திராவிடர் கழக மகாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இடமும் காலமும் பின்னர் அறிவிக்கப்படும்.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
செயலாளர்கள்.

## பெரியாருக்கு அபராதம்

பெரியார் சென்ற மாதம் ஏற்காட்டுக்கு, மலைவாசத்திற்கு போனபோது சாப்பாட்டுச் சாமானுடன் 7½-படி அரிசி கொண்டு போனார் என்று குற்றம் சாட்டி பெரியார் ராமசாமிக்கும், அவர் தமையனார் ஈ. வெ. கி. அவர்களுக்கும், மணியம்மைக்கும், தலைக்கு 75-ரூபாய் விதம் 225 ரூபாய் அபராதம், ஈரோடு சப்மேஜிஸ்டிரேட் தோழர் நரசிம்ம அய்யங்கார் விதித்தார். அபராதம் உடனே செலுத்தப்பட்டது.

## வைசிராய் திட்டத்திற்கு திராவிடர்கள் எதிர்ப்பு

வைசிராய் திட்டத்தை எதிர்த்து கீழ்க்கண்ட திராவிடக் கழகங்கள் மே. த. வைசிராய் அவர்களுக்கு தந்திகள் கொடுத்திருக்கின்றன.

### பொன்னமாப்பேட்டை

"எங்கள் திராவிடத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலக்காமல் சிம்லாவில் நடைபெறும் மாநாட்டின் முடிவுகள் தென்னிந்தியாவிலுள்ள 4½ கோடி திராவிடர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது" என்று சேலம் பொன்னமாப்பேட்டை திராவிடர் கழகத்தார் 3-7-45-ந் தேதி தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

### துறையூர்

"தென்னிந்தியாவிலுள்ள 4½ கோடி தமிழர்களின் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை சிம்லாமகாநாட்டிற்கு அழைக்காமல் செய்யப்படும் முடிவுகள் திராவிடர்களாகிய எங்களைக் கட்டுப்படுத்தாது. தென்னிந்தியாவிலுள்ள திராவிடர்களின் பிரதிநிதி காங்கிரஸ் அல்ல" என்று துறையூர் திராவிடர் கழகத்தினரால் 4-7-45-ந் தேதி தந்தி கொடுக்கப்பட்டது.

### திட்டக்குடி

ஷையூர் திராவிட இளைஞர் கழகத்தார், 5-7-45-ந் தேதி "சிம்லா மகாநாட்டின் வைசிராய் தீர்மானங்கள் தென்னிந்திய திராவிடர்களை, ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சம்மதமில்லாமல் கட்டுப்படுத்தாது" என்று தந்திகொடுத்திருக்கிறார்கள்.

### அருப்புக்கோட்டை

29-6-45-ந் தேதி ஷை கழகத்தின் சார்பாக மே. த. வைசிராய்க்கு கீழ்வரும் தந்தி கொடுக்கப்பட்டது.

"ஜஸ்டிஸ் கட்சி தலைவர் பெரியார் ஈ. வெ ராமசாமி அவர்களைக் கலந்து கொள்ளாது மே. த. வைசிராய் அவர்கள் சிம்லாவில் கூடி செய்யும் எந்த முடிவும் தென்னாட்டிலுள்ள திராவிட மக்களைக் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறோம்."

## ஈரோட்டில் உமர் புலவர் தினம்

ஷை தின விழாவை ஈரோட்டில் கொண்டாட ஈரோடு சித்திக் தொண்டர் படையினர் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். ஷை விழாவிற்கு தோழர்கள் சி. என். அண்ணாதுரை, திருப்பூர் மொய்தீன், பண்டிட் ஜெயிலானி, பண்டிட் நைனாமுகமது உடுமலைப்பேட்டை, பாரதிதாசன், கூத்தாநல்லூர் மௌல்வி எஸ். ஏ. மஹ்மூது அலி, ஆலூர் எம். ராஜ்முகமது பி. ஏ., கே. யு. அழகிரிசாமி முதலியவர்களை வரவழைப்பதென முடிவு செய்திருக்கிறார்கள்.

ரோஜா முத்தையா

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பறைத் தன்மை சக்கிலித் தன்மை உடனே ஒழிந்துபோகிறதோ அதேபோல் அறியாமையால் ஆரியத்தில் சிக்குண்டு கீழ் மகனான மக்கள் தங்களைத் திராவிடர்கள் என்றுசொல்லிக்கொண்டாலே சரிசமமான மக்களாக ஆகிவிடுகிறார்கள். அதாவது எல்லா மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் உரிமையும் சமபங்குமுள்ள சுதந்திர மக்களாக ஆகிவிடுகிறார்கள். அப்படிக்கில்லாமல் தன்னை ஆரியத்தோடு பிணைத்துக்கொண்டு இருக்கிற எந்தத் திராவிடனும் கீழ்மகன் என்ற தன்மையை ஒப்புக்கொண்டவனேயாவான், எவ்வளவு முயற்சி செய்தாலும் மீள முடியாதவனே ஆவான். உதாரணமாக தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ளுவதன் மூலம் எவ்வளவு பெரிய ஜாதி வைசியனானாலும், "பிராமண"னுக்கு கீழ் ஜாதி என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதுதான் இன்றைய அனுபவம். இதுதான் இதுவரை யார் பாடுபட்டும் வெற்றிபெறாத காரணம். இதை கண்டிப்பாய் உணருங்கள். யுக்திக்கும் நியாயத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்த உண்மையாகும் இது.

## திராவிடர் என்பதின் கருத்து

இனி திராவிடத் தன்மையைப் பற்றிச் சில கூறுகிறேன்.

நான் நம்மை திராவிடர் என்பதும் இது சரித்திர காலத் தன்மை என்பதும் உங்களை நான் அந்தக் காலத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகக் கருதாதீர்கள்.

அல்லது திராவிடர் ஆரியர் என்று உடல் கூறு சாஸ்திரப்படி பரீட்சித்து அறிந்து பிரித்துப் பேசுவதாகக் கருதாதீர்கள்.

அல்லது திராவிடருக்கு என்று ஏதோ சில தன்மைகளை எடுத்துச் சொல்லி அதை சரித்திர ஆராய்ச்சிப்படி மெய்ப்பித்துச் சொல்லுவதாகக் கருதாதீர்கள். இவைகள் எப்படி இருந்தாலும், இவை பிரிக்க முடியாததாய் இருந்தாலும் சரி நம்மை இன்றைய இழிவிலிருந்து, தாழ்மையிலிருந்து, முன்னேற முடியாமல் செய்யும் முட்டுக்கட்டையிலிருந்து மீண்டு தாண்டிச்செல்ல நமக்கு ஒரு குறிச்சொல் வேண்டும். சுயராஜ்யம் என்றால் எதைக் குறிக்கிறது?, பாகிஸ்தான் என்றால் எதைக் குறிக்கிறது?, மோக்ஷம் என்றால் எதைக் குறிக்கிறது?, வெள்ளையனே வெளியே போ என்றால் எதைக் குறிக்கிறது? என்று பார்த்தால் அவை ஒரு கருத்தை, ஒரு விடுதலைத் தன்மையை, ஒரு பயனை அனுபவிப்பதை எப்படிக் குறிப்பிடுகின்றனவோ அப்படிப் போல் நம்மை இழிவிலிருந்து விடுதலை செய்து ஒரு முற்போக்கை ஒரு பயனை அடைதலை, ஒரு மீட்சியைக் குறிப்பிட ஏற்படுத்தி இருக்கும் சொல்லாகும்.

ஆதலால் வார்த்தையின் பேரில் வழக்காடவேண்டியதில்லை. திராவிடம் என்பது என்ன மொழியாய் இருந்தால் என்ன? காப்பி (பானம்) என்னமொழி? அது காலை ஆகார (பான)த்திற்கு ஒரு குறிப்பு மொழி. அவ்வளவில் தான்பார்க்கவேண்டும். பாக்கிஸ்தான் என்னமொழி? இந்துக்கள் என்பவர்கள் ஆதிக்கத்தில் இருந்தும் மீளுவதற்கு ஒரு அறிகுறி; மொழி; அவ்வளவில்தான் அதை கருத வேண்டும்.

## "கலந்து விட்டது" என்பது

ஆரியன் திராவிடன் என்பது கலந்துபோய்விட்டது, பிரிக்க முடியாதது, ரத்தபரீட்சையாலும் வேறுபடுத்த முடியாதது என்று சிலர் வாதாடலாம். அது நமது கருத்தை அறியாமல் பேசும் அறிவற்ற பேச்சு என்றே சொல்லுவேன். ஆரிய திராவிட ரத்தம் கலந்துவிட்டிருக்கலாமே தவிர ஆரியத் திராவிட ஆச்சார அனுஷ்டானங்கள் கலந்துவிட்டனவா? "பிராமணாள் ஓட்டல்" பிராமணர்களுக்கு மாத்திரம், பிராமணன்—சூத்திரன், பறையன், சக்கிலி, பிராமணனல்லாதவன் ஆகிய பிரிவுகள் எங்காவது கலந்துவிட்டதா? பேதம் ஒழிந்துவிட்டதா? பிராமணர்கள் என்பவர்கள் உயர்வும் பாடுபடாமல் அனுபவிக்கும் போக போக்கியமும், சூத்திரர்கள் பறையர்கள், சக்கிலிகள் (திராவிடர்கள்) என்பவர்கள் இழிவும், கஷ்ட உழைப்பும், ஏழ்மையும் தரித்திர வாழ்வும் எங்காவது சரிசரி கலந்துவிட்டதா? பிரிக்கமுடியாதபடி ஒன்றிவிட்டதா? [illegible] கலந்து விட்டதா? அல்லது "அறிவு" "கல்வி" "தகுதி" "திறமை" கலந்துவிட்டதா? எது கலந்துவிட்டது? இரத்தம் கலந்தாலென்ன கலாவிட்டால் என்ன? வாழ்வு, போக போக்கியம், உரிமை கலர வேண்டாமா?

சட்டைக்காரர் என்று ஒரு கூட்டம் இருக்கிறது, இது வெள்ளை ஆரிய கருப்பு திராவிட ரத்தக்கலப்பு என்பதில் எவருக்கும் ஆட்சேபனை கிடையாது என்றாலும்; நமக்கும் அவர்களுக்கும் எதில் கலப்படம் இருக்கிறது? அவர்கள் தனி சமுதாயமாக வெள்ளை ஆரியர் (ஐரோப்பியர்) போலவே ஆச்சார அனுஷ்டானங்களில் நம்மில் இருந்து பிரிந்து உயர்வாழ்வு வாழுகிறார்கள். இவர்களைப் பார்த்து கருப்பு திராவிடன் ரத்தத்தால் பிரிக்க முடியாதவர்கள் என்று சொல்லுவதில் பொருள் உண்டா என்று பாருங்கள்.

ஆகவே திராவிடர் என்பது நமக்கு ஒரு குறிச்சொல், லட்சியச் சொல் ஆகும். எப்படியாவது ஆரியக் கட்டுப்பாட்டால் நமக்கு ஏற்பட்டிருக்கிற கொடுமையான இழிநிலை, முட்டுக்கட்டை நிலை மாறி மேன்மை அடையவேண்டும். ஆரியம் என்றால் மாற்றத்திற்கு இடமில்லாதது திராவிடம் என்றால் மாற்றிக்கொள்ள இடமளிப்பது என்பதுதான் உண்மை தத்துவமாகும்.

நாம் இந்த திராவிடர் என்ற பெயர் கொண்டுவிடுவதால் நமக்கு வேறு தவறுதல்கள் எதுவும் நேர்ந்துவிடாது. நம் எதிரிகள் சொல்லும் குறும்புத்தனமான குற்றச்சாட்டுகளுக்கு அதாவது கடவுள், மதம், சாஸ்திரம், ஒழுக்கம், கலை, தர்மம், புண்ணியம், பக்திவிசுவாசம் முதலியவைகள் எல்லாம் ஒழிக்கப்பட்டுப் போகும் என்பவை மிகவும் இழிவான குணத்தோடு நம்மீது வைக்கும் குற்றச்சாட்டுகளும் புகார்களுமாகும். திராவிடர், திராவிட இனத்தவர், திராவிடக் கூட்டத்தவர் என்பதற்கும், இந்தக் குற்றச்சாட்டுக்கும், எவ்வித சம்பந்தமுமில்லை. இவைகள் ஒன்றும் கெட்டுவிடாது. ஆரியத்தால் தீண்டப்படாதவனான ஒரு பறையன், சக்கிலி தன்னை இஸ்லாமியன் என்று ஆக்கி

ரோஜா முத்தையா

கொண்டால் அவன்மீதுஇருந்த இழி தன்மைகளுக்கு அருத்தம் உண்டா என்று பாருங்கள். அதோடு அவனுக்கு அவன் பறையனாயிருந்தால் சூழ்ந்துகொண்டிருந்த—அவனைப் பறையனாக்குவதற்குக் காரணமாயிருந்த கடவுள், மதம், சாஸ்திரம், கலை, ஒழுக்கம், புண்ணியம்முதலிய ஈனத் தன்மைகள் ஆரியருடையதுவுங் கண்டிப்பாய் ஒழிந்துப்போய்விடுகிறதா இல்லையா பாருங்கள். அதனால் அவன் நாஸ்திகன் ஆகிவிடுகிறானா இல்லையே, அதற்குப் பதிலாக ஈனத் தன்மைக்குக் காரணமாயில்லாத இஸ்லாம் கடவுள், மதம், சாஸ்திரம், கலை, ஒழுக்கம் முதலியவைகள் அவனைச்சூழ்ந்து அவன் மீதிருந்த இழிவுகளை நீக்கிவிடும்.

உதாரணமாக ஆரியனுக்கு உருவக் கடவுள், இஸ்லாமியனுக்கு உருவமில்லாத கடவுள் என்பதோடு உருவக் கடவுள் வெறுப்பும் உண்டு. ஆரிய மதத்துக்கு ஜாதி பேதம், இஸ்லாமிய மதத்திற்கு ஜாதி பேதம் இல்லை; இப்படிப் பல மாறுதல்கள்தான் திராவிடனுக்கு உண்டாகலாம். இதனால் கடவுள், மதம், சாஸ்திரம், கலை, ஒழுக்கம் ஒழிந்துவிட்டதாகவோ ஒழிக்கப்பட்டதாகவோ அருத்தமா?

இங்குதான் உங்களுக்கு அருத்தத் தெளிவு வேண்டும்! ஜாக்கிரதை வேண்டும். இன்றைய உலகம் எல்லாத்துறையிலும் மாறுதல் ஏற்பட்டு முன்னேற்றம் அடைந்து வருகிறதே ஒழிய நாசமாய்விடவில்லை. பழையனகளுக்கும், பயனற்றனகளுக்கும் சிறிதாவது குறைந்த சக்தி கொண்டவைகளும் நசித்துத்தான் போகும்; கைவிடப்பட்டுத்தான் போகும்.

சக்கிமுக்கியில் ஏற்பட்ட வெறும் நெருப்பு வெளிச்சம் மறைந்து படிப்படியாக மாறி இன்று எலக்டிரிக் (மின்சார விளக்கு) வெளிச்சம் வந்ததனாலே நாசவேலையல்ல என்பதும் அது முற்போக்கு வேலை என்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆதலால் ஆரம்ப காலத்தில் பழங்காலத்தில் தோன்றிய அல்லது தோற்றுவிக்கப்பட்ட கடவுள், மதம், சாஸ்திரம், கலை, ஒழுக்கம், பக்தி என்பவைகள் இன்றைக்கும் அப்படியே பின்பற்றப்படவேண்டும் என்றால் அது அறியாமையேயாகும். அறியாமை அல்ல என்றால், புத்தர், ஏசு, மகம்மது, ராஜாராம், மோகன்ராய் ஆகிய கடவுள், மதம், கலை, ஒழுக்கம், பக்தி ஆகியவைகளில் மாற்றம் ஏற்படுத்தியவர்கள் நாசவேலைக்காரர்களா? எடிசன், மார்க்கோனி, டார்வின், சக்காடல் அதர், மார்க்ஸ், எஞ்சல்ஸ் ஆகியவர்கள் நாசவேலைக்காரர்களா? இவர்கள் மனித சமுதாய ஒழுக்கத்தை சமுதாய அடிப்படையைக் கலைப்பவர்களா?, என்று சிந்தியுங்கள்; மாறுதல் உணர்ச்சியால் அதுவும் முற்போக்கான பழமையை உதறித்தள்ளின மாறுதலில்தான் பயன் உண்டாக முடியும்.

மாறுதல் என்று சொல்லி பழமையைத் திருப்புவது, அதாவது நாட்டியம் கொண்டுவருவது, செல்லரித்து மக்கி ஆபாசமாகப் போன புராணங்களை உயிர்ப்பிப்பது, பழைய கோவிலைப் புதுப்பிப்பது என்பவைகள் மாறுதல் ஆகிவிடாது. எனவே மாறுதல் கருத்தால் வெகுகாலமாக இருந்து வரும் குறைகளை இழிவுகளை நீக்கிக் கொள்ளச் செய்யும் முயற்சியை நாசவேலை என்று கருதாதீர்கள்.

இவ்வித மாறுதலுக்கு நீங்கள் தான், அதாவது இளைஞர்கள், குழந்தைப் பருவமுள்ளவர்கள் ஆகியவர்கள்தான் பெரிதும் தகுதி உடையவர்கள் ஆவார்கள். நன்றாய் சிந்திக்கும் காலம் இது. சிந்தித்து வாது புரியுங்கள், விவகாரம் செய்யுங்கள். அதனால் அநுபவம், அறிவு முதிர்ச்சி பெறுவீர்கள். உங்கள் வாதத்தால் உங்கள் ஆசிரியர்களுக்கும் சிந்திக்கும் சக்தியும் தெளிவும் தோன்றும்படி வாது புரியுங்கள். நீங்கள் காரியத்தில் இறங்க உங்களுக்கு இன்னும் சற்று அநுபவம் பெறுங்கள். பெரியவர் சொல்வதையும் காது கொடுத்துக் கேளுங்கள், கேட்டவைகளைச் சிந்தித்து சிந்தித்து உண்மை நேர்மை கண்டுபிடிக்க வாதம் செய்து, கேள்வி கேட்டு அநுபவம் பெறுங்கள். எனவே, நான் இவ்வளவு நேரம் சொன்னவைகளில் உள்ள குற்றம் குறைகளை உங்கள் தலைமை ஆசிரியரும், இக்கூட்டத் தலைவருமான அறிஞர் திருத்துவார், என்பதாக பேசினார்.

பிறகு தலைவர் முடிவுரை கூறுகையில் பெரும்பாலான விஷயங்களை ஆதரித்துப் பேசி, திராவிடர் என்ற வார்த்தைக்கு நல்ல விளக்கம் ஏற்பட்டதாக பாராட்டி மாணவர்களுக்கு அறிவுரை நிகழ்த்தினார்.

பிறகு கழகக் காரியதரிசி ஈ. வி. கே. செல்வம் நன்றி கூறுதுடன் 9-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

---

## மணமகள் தேவை

கருணீகர்மரபு; வயது 37, பிரான்ஸ் B. A., L. T., 100 ரூ சர்க்கார் வருமானம். பிரான்ஸ் மொழி ஆசிரியர், சொத்துள்ளவர். புதுச்சேரிவாசி.

இவருக்கு ஷை மாபீல் மணமகள் தேவை. சுமாரான கல்வி, அழகு வேண்டும்.

விவரத்திற்கு,

பாரதிதாசன்,
புதுச்சேரி.

என்ற முகவரிக்கு எழுதவும்.

## உடனே தேவை

தமிழ் தெரிந்தவர்களாய் எல்லாக் கிராமங்களிலும் சூப்ரெண்டெண்டுகளும், இன்ஸ்பெக்டர்களும் தேவை. மாதச் சம்பளம் ரூ. 35 முதல் 65 வரையிலும், 20 முதல் 40 வரையிலும். டிபாசிட் ரூ. 150-ம், 100ம் கட்டவேண்டும். திரும்பக்கொடுக்கப்படும். பணத்துடன் நேரில் வரவும்.

P. G. கண்ணன், U. corp, சூப்பிரண்டெண்டு மானாம்பேட்டை தஞ்சை ஜில்லா.

## தோழர்களே கவனியுங்கள்

பித்தவாயு, அஜீரணம், வாந்தி, மயக்கம், தலைவலி, நெஞ்சுவலி, இடுப்புவலி, முதுகுவலி, குடல்வாதம், மூலம், வெளுத்திரம், மலச்சிக்கல் முதலிய நோய்களுக்கு ஜெயராம் காயசுத்தி லேகியம் கைகண்டமருந்து. ஒரே வேளையில் குணம்.

1சேர் ரூ 4. ½சேர் ரூ. 2/8

V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசி விஸ்வநாதர் கீழவீதி,
கும்பகோணம்

---

7-6-45ந் தேதி நடந்த சம்பாசிவல்லூர் தோழர்கள் வே. ஆறுமுகம்-இராசம்மாள் திருமணத்தின் மகிழ்ச்சியாக 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திருமணங்கள்

சங்ககிரி நல்லூர் தோழர் வேலாயுத படையாச்சியார் புதல்வர் வே. ஆறுமுகம் அவர்களுக்கும் பெண்ணாகடம் தோழர் குப்புசாமி படையாச்சியார் புதல்வி கு. இராசம்பாள் என்னும் அம்மையாருக்கும் 7-6-45-ந் தேதி புலவர் வை. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. தோழர்கள் அ. சிதம்பரம், ஆறுமுகம், மணிமொழி, பி. வேலாயுதம், இராமசாமி, தவமணி இராசன் முதலியவர்கள் பேசினார்கள்.

அன்று இரவு சங்ககிரி நல்லூரில் புலவர் அ. சிதம்பரம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் தவமணி பேசினார். தோழர் இளந்தமிழன் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. சென்னை போலி ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

கரூர் திராவிடர் கழக அங்கத்தினர் தோழர் ஆறுமுகம் அவர்களுக்கும், தோழர் பழனியம்மாள் அவர்களுக்கும் மணமகன் இல்லத்தில் புரோகிதமின்றி மூடச் சடங்கின்றி தோழர் பி. கே. அய்யா முன்னிலையில் சீர்திருத்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

உத்தமபாளையம் சுகாதார இன்ஸ்பெக்டர் தோழர் எ. பாலசுப்பிரமணியம் குமாரத்தி தோழர் மவுனாம்பாளுக்கும், காளையார்கோவில் சப்ரிஜிஸ்டிரார் ஆபீஸ் குமாஸ்தா தோழர் விஸ்வநாதன் குமாரர் தோழர் முத்துசுப்பிரமணியன் என்ற பிச்சையாவுக்கும் 13-6-45-ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

* *

தஞ்சை பள்ளியகரம் எஸ். சீனிவாசன் அவர்கள் ஜெனகம் எனும் அம்மையை 10-5-45-ந் தேதி காலை சங்க அமைச்சர் தோழர் கீ. கந்தசாமி அவர்களின் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சுயமரியாதைத் திருமணம் புரிந்து கொண்டார். இதனையொட்டி வாழ்த்துப்பாக்கள் வாசித்தளிக்கப்பட்டன. பல புலவர்கள் சொற்பெருக்காற்றினர். ஓர் மாபெரும் சமபந்தி விருந்து நடைபெற்றது.

* *

திகழும் பெரியார் ஆண்டு 66 வைகாசி திங்கள் 31-ம் நாள் கல்லிடைக்குறிச்சி திராவிட கழக காரியதரிசி சி. தோழர் சி. கணபதிக்கும், பண்பொழி தோழர் சுப்பையாத் தேவர் புதல்வி தோழர் சிவணம்மையாருக்கும் மணமகன் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இதன் நினைவாகக் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 அனுப்பப்பட்டிருக்கிறது.

* *

காரைக்கால் தோழர் சா. ஆறுமுகம் அவர்கள் மகள் முத்துலட்சுமிக்கும், காரைக்குடி தோழர் க. அண்ணாமலை அவர்கள் சகோதரன் பெருமாள் பாண்டியனுக்கும், 13-6-45-ல் குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் டாக்டர் "தொழிலாளர் மித்திரன்" ஆசிரியர் தோழர் சாஞ்சி கல்யாண சுந்தரனார் அவர்களால் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைக்கப்பட்டது. அதுபோது தோழர்களான க. சுப்பாரயன், அ. முகம்மது ஷரீபு, எ. எம். அலி, சகிது கமால், அப்துல் சமது, காளைதியம் முதலியவர்கள் மணமக்களை வாழ்த்தியும், தன்னுணர்வு மணத்தின் அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். மணமக்கட்கு வாழ்த்தும் அன்பளிப்பும் அளிக்கப்பட்டது. இத் திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூபாய் மூன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

செங்கம் தாலூகா புதுப்பாளையம் ஜில்லா போர்டு ஆரம்ப பாடசாலை ஆசிரியர் தோழர் ஜி. எஸ். பழனிவேலு அவர்களின் மகன் தோழர் பி. அம்பிகாபதிக்கும் அண்ணாண்டிபட்டி (திருப்பத்தூர் தாலூகா) தோழர் பெரியசாமி அவர்களின் மகள் தோழர் பி. கமலம் அம்மைக்கும் தமிழ் சீர்திருத்தத் திருமணம் புதுப்பாளையம் கே. ராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் இல்லத்தில் 7-6-45-ந் தேதி காலை நடைபெற்றது. திருமணம் திருவண்ணாமலை தோழர் ஆர். எஸ். நடேசமுதலியார் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. மணமக்களுக்கு வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. பிறகு பந்தலின் தண்டாம்பட்டு தோழர் சித்தாரெட்டியார் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் எஸ். வி. சுப்பிரமணியம், தங்கமணி, ஜனார்த்தனம், கண்ணன் முதலானவர்கள் திருமணத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். இத்திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு"க்கு 2 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

மதுரை எ. கே. பாண்டியன் அவர்களின் குமாரன் பா. கருப்பையாவுக்கும் கல்லக்குறிச்சி (எஸ். எ) தோழர் மு. ராஜேஸ்வரிக்கும் 17-5-45-ந் தேதி சென்னை பெரம்பூர் சோமசுந்தர முதலியாரவர்கள் இல்லத்தில் புரோகிதமின்றி ரா. ஆறுமுகம் அவர்களின் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்தேறியது. செல்விக்குப்பம் தோழர் ஜே. பி. கவிஞர் அவர்கள் சீர்திருத்தத் திருமணம் பற்றி சொற்பொழிவாற்றினார். இதன் நினைவாக "குடி அரசு"க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

20-6-45-ந் தேதி நாட்டாம்பள்ளியில் தோழர்கள் பாப்பண்ணகவுண்டருக்கும், ஜெயலட்சுமிக்கும் தோழர் எச். எஸ். ரங்கசாமி தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப் பற்றித் தலைவர் அவர்களாலும், பல நண்பர்களாலும் விளக்கமாகச் சொற்பொழிவாற்றப்பட்டதுடன் நாட்டாம்பள்ளி "திராவிடர் கழகத்துக்கு" மணமக்கள் சார்பாக 1 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

ஆனைமலை பிக்கா சுப்பேகவுண்டன் புதூரில் 27-6-45-ந் தேதி ஆனைமலை திராவிட கழக கமிட்டி மெம்பர் தோழர் எ. எஸ். கே. முத்து தலைமையில் மாசாணி மருத்துவர் குமாரத்தி மையிலாத்தாளுக்கும் திருப்பூர் பி. கோபால் மருத்துவர் குமாரனும் ரயில்வே (S. I. R) ஆடிட்டிங் கிளார்க் பி. ஜி முத்துச்சாமிக்கும் சீர்திருத்தத் திருமணம் நடந்தது.

* *

வாணியம்பாடி காதர் பேட்டை, ஈஸ்ட் திராவிடன் அசோசியேஷன் வைஸ்பிரசிடெண்ட் தோழர் ஏ. ராகவன் தலைமையில், தோழர் வேலாயுதன் நாயருக்கும் தோழர் பி. செல்லம்மாளுக்கும் வடஆற்காடு ஜில்லா ரிஜிஸ்திரார் அவர்களால் பதிவு திருமணம் நடந்தேறியது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் ஜி. பழனிமுத்து, டி. சாமிநாதன் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

19-6-45 கைகழக நிர்வாக உறுப்பினரும் சுயமரியாதைத் தொண்டருமான தோழர் சு. கிருஷ்ணன் அவர்களுக்கும் தோழர் அம்மாகண்ணு என்கின்ற தேவிக்கும் திருச்சி பதிவு ஆணையாளர் முன் பதிவுத் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை மணமக்களை பாராட்டும் கூட்டம் தோழர் கி. வே. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஈ. வி. கே. சம்பத் மற்றும் பல தோழர்கள் பதிவு திருமணத்தைப்பற்றி விரிவாக பேசினார்கள். திராவிட வாலிபர் கழகத்தின் சார்பாக ஓர் வாழ்த்து பத்திரமும் மலர் மாலைகளும், கற்கண்டார் கோட்டை திராவிடர் கழக சார்பிலும், ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் திராவிடர் வாலிபர் கழக சார்பிலும் மலர் மாலைகளும் தோழர்கள் ஜி. பராங்குசம் அவர்களால் வெள்ளி டம்ளரும், தோழர் பெருமாள் அவர்களால் 4 பகுத்தறிவு புத்தகங்களும் மணமக்களுக்கு வழங்கப்பட்ட

பின் மணமகன் வந்தனங்கூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிவுற்றது.

* *

தூத்துக்குடியில் தோழர் எம். ரத்தினம் தலைமையில் 4-7-45-ந் தேதி தோழர்கள் நடராஜனுக்கும் மந்திரம் அம்மையாருக்கும் கலப்பு மணம் அதி விமரிசையாக நடைபெற்றது. கலப்பு மணம் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

* *

28-6-45ல் குறிஞ்சிப்பாடி பிர்க்காவில் மேற்படியூர் திராவிடர் கழகத்தின் பெரு முயற்சியாலும், ஆலம்பாடி பங்காரு ரெட்டியார் ஒத்துழைப்பாலும் முதல்முதலாக இப்போதுதான் புலவர் தோழர் சிங்காரவேல் அடிகள் தலைமையில் குறிஞ்சிப்பாடி தோழர் எம். முத்துலிங்க ரெட்டிக்கும், தோழர் எஸ். சரோசனிக்கும் சுயமரியாதை (சீர்திருத்த) திருமணம் நடைபெற்றது. அச்சமயம் அண்ணாமலை நகர் மாணவமணி இரெ. இளம்வழுதி, குறிஞ்சிப்பாடி திராவிடர் கழக செயலாளர் இரா. சரவணன், தோழர் இராமமூர்த்தி ரெட்டியார் முதலியவர்கள் சீர்திருத்த திருமணத்தின் நோக்கங்களையும் அவசியங்களையும் விளக்கி சொற்பொழிவு ஆற்றினர். அதன்பின் மணமகனால் திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

காரைக்குடி தோழர் சதாசிவக் குருக்களுக்கும் காரைக்குடி தோழர் ராஜலெட்சுமிக்கும் விதவா விவாகம் மிகச் சிறப்பாக 8-7-45ந் தேதி குன்றக்குடியில் நடந்தது. மாலை மாற்றிக்கொண்ட பிறகு ஒரு பாராட்டுக்கூட்டம் தோழர் ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. இத்திருமணம் குன்றக்குடி வாலிப சங்க ஆதரவில் நடைபெற்றது.

* *

27-6-45ந் தேதி அருப்புக்கோட்டை சொக்கலிங்க பாண்டியர் அவர்கள் தலைமையில் அருப்புக்கோட்டை தோழர் சு. மாயக்கருப்பநாடார் அவர்கள் மகள் தோழர் தங்க லட்சுமிக்கும் தோழர் ம. ஆறுமுகம் அவர்கள் மைத்துனர் தோழர் இருட்டினனுக்கும் மணமகன் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இத்திருமணத்தை ஒட்டி திராவிடநாடுக்கு ரூ. 2ம், குடி அரசுக்கு ரூ. 2ம் அருப்புக்கோட்டை மு. மு. முத்துசாமி நாடார் ஞாபகார்த்த வாசகசாலைக்கு ரூ. 1ம், மதுரை சுந்தரப்பேட்டை அண்ணாதுரை இலவச வாசகசாலைக்கு ரூ. 10ம் நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

2-7-45-ஆம் தேதி திங்கட்கிழமை கோட்டாத்தூரில் மணமகன் இல்லத்தில் திருச்சி வழக்கறிஞர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் மணமகன் முசிறி வட்டம் கோட்டாத்தூர் தோழர் குணம் நல்லப்ப செட்டியார் மகனும், நமதியக்க அன்பர் தோழர் நல்லப்பசெட்டியார் தம்பியுமான தோழர் நல்லுசாமிக்கும், பெரம்பலூர் வட்டம் நாருகுப்பை, செங்குணம், கடுப்பண்ணை தோழர் அரங்கசாமிரெட்டியார் மகள் தோழர் கமலத்திற்கும் சீர்திருத்தத் திருமணம் சிறப்பாய் நடந்தேறியது. அது காலை தலைவர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தமிழர் திருமணங்களில் ஆரியப் புரோகிதர்களை நுழைய விடக் கூடாது; ஓமம் வளர்த்தல், சப்தபதி முதலிய பொருத்தமற்ற ஆரியச் சடங்குகளை விலக்கவேண்டும்; தமிழர்களின் தாலி கட்டும் பழைய வழக்கத்தை இடைக்காலத்தில் வந்த ஆரியர் பின் பற்றினர்; எல்லோரும் இக்காட்டில் கல்வி கற்று உயர்நிலை பெறவேண்டும்; உடலை ஓம்பி வளர்க்கவேண்டுமென்று, இன்ன பல செய்திகளைத் தெளிவாக எடுத்தியம்பினார்.

அடுத்தபடியாக துறையூர் தோழர்கள் உதவி பஞ்சாயத்து ஆபீசர் சுப்பராயக் கவுண்டர், பெருமிலக்கிழவர் உயர்நிலைத் துவக்கப் பள்ளி ஆசிரியர் சு. கணபதி, து. ம. பெரியசாமி, (பெருமிலக்கிழவர் உயர்நிலைப் பள்ளி மாணவன்) ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் எனும் பொருள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தனர்.

பல அன்பர்கள் வாழ்த்துப் பத்திரங்களை மண மக்களுக்கு வாசித்தளித்தனர். (சு. கணபதி துறையூர் திராவிட மாணவர் கழகத்தார், வே. சு. சப்தரிஷி; லால்குடி உயர்நிலைப் பள்ளி மாணவர்)

பிற்பகல் சுமார் $5\frac{1}{2}$ மணிக்கு துறையூர் வழக்கறிஞர் தோழர் வி. பி. அரங்கசாமி ரெட்டியார் தலைமையில் மண மக்களுக்குப் பலரும் பரிசுகள் வழங்கினர், தலைவர் அவர்கள் அம்மி மிதித்து அருந்ததி காட்டும் புராண ஆபாசக் கதைகள் ஏட்டிலிருப்பதைத் திருமண காலத்தில் நடைமுறையில் செய்து காட்டும் அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள் இத்திருமணத்தில் இல்லையென்றும், இதைப்போன்ற சீர்திருத்தத் திருமணங்கள் நாட்டில் பல நடைபெற வேண்டுமென்றும் கூறிமுடித்தார். இரவு $7\frac{1}{2}$ மணிக்கு ஊர்வலத்தோடு திருமணம் இனிது முடிவுற்றது.

* *

2-7-45ந் தேதி மயனூரில் தோழர்கள் மா. பெ. குமாரசாமி—சுப்பம்மாளுக்கு திருந்தியமுறையில் பல எதிர்ப்புக்கிடையே சீர்திருத்த திருமணம் அரூர் தோழர் வி. எம். பழனிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது காலை பல தோழர்கள் சீர்திருத்த மணம் பற்றி பேசினார்கள். மணமக்களுக்கு குடி அரசு பதிப்பக புத்தகங்களும், பாரதிதாசன் நூல்களும், இன்னும் பல பரிசுகளும் வழங்கப்பட்டன.

* *

சென்ற 28-6-45 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வடார்க்காடு ஜில்லா திருவத்திபுரத்தில் தோழர்கள் தணிகை உலகநாதனுக்கும், கமலாவுக்கும் திராவிடநாட்டுத் தனிப்பெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. மணப்பந்தலில் ஒலி பெருக்கியும் அமைக்கப்பெற்றிருந்தது. உள்ளூர் வெளியூர்த் தோழர்கள் பெரியார் சொற்பொழிவைக் கேட்க ஆயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்தனர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துத் தந்திகளும், கடிதங்களும், பரிசுகளும் வந்தன. திருவத்திபுரம் தோழர்கள் மா. அண்ணாச, தேவராசன் இயற்றிய "தன்மான இயக்கம் சாற்றியது என்ன?" என்ற நூல் மணமலராக வெளியிடப்பட்டது. பின்னர், புலவர் மயிலை சிவ முத்து, சிவ. குப்புசாமி, புலவர் கோ. பாலசுந்தரனார், புலவர் கா. கோவிந்தனார், ஆசிரியர் வேதாத்திரிப் பிள்ளை பி. ஏ., எல். டி., ஆகியவர்கள் வாழ்த்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர் $2\frac{1}{2}$ மணி நேரம் பெரியார் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். மணமகன் தணிகை உலகநாதன் அவர்கள் 'குடி அரசு', 'திராவிடநாடு' முதலிய செய்தித்தாள்கட்கும், மாணவர்களுக்கும் நன்கொடைப் பரிசுகள் வழங்கி நன்றிகூறக் கூட்டம் இனிது கலைந்தது.

இவ்வூரில் இத்தகைய சீர்திருத்த முறையில் நடந்த முதல் திருமணம் இதுவாகையால் மக்கள் மனத்தில் பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

## இத்திருமணத்தின் எதிரொலி

திருவத்திபுரத்தில் பார்ப்பனியம் நீக்கித் தன்மானத் தமிழ்த் திருமணம் தோழர் தணிகை உலகநாதனுக்கும், கமலாவுக்கும் பெரியார் தலைமையில் நடந்தது கண்ட இவ்வூர்ப் பார்ப்பனர்கள் வைதீகர்களுக்குப் புரோகிதம் செய்ய வரமுடியாதென்று தமக்குள் கட்டுப்பாடாக வேலை செய்து வருவதாக வதந்தி உலவுகிறது.

* *

26-6-45-ல் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தோழர்கள் சாம்பசிவம்-சரோஜா திருமணம் வடஆற்காடு தேனூரில் நடைபெற்றது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை